CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

குருபாதம்

சுந்தர மூர்த்தி நாயனார் அருளிய

ஏழாம் திருமுறை

(பண்முறை)

வெளியீடு :

தருமை ஆதீனம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

CENTRE FOR SHAIVA STUDIES
Puducherry

உ
குருபாதம்

சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய

ஏழாம் திருமுறை

(முழுவதும்)

திருக்கயிலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம்
27 ஆவது குருமகாசந்நிதானம்
திருமுறைச் செப்பேடு கண்டெடுத்த
ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
திருவுளப்பாங்கின் வண்ணம்

தருமபுரம் ஆதீனத்திற்குச் சொந்தமான
திருபுவனம் ஸ்ரீ கம்பகரேஸ்வரசுவாமி தேவஸ்தானம்

ஸ்ரீ அறம்வளர்த்த நாயகி உடனாகிய ஸ்ரீ கம்பகரேசுவர சுவாமி
ஸ்ரீ சரபேசுவர சுவாமி திருக்கோயில் மகாகும்பாபிஷேகப்
பெருவிழாவில் வெளியிடப்பட்டது.
நாள் : 02.02.2024

ஞானசம்பந்தம் பதிப்பகம் தருமபுரம் ஆதீனம்
மயிலாடுதுறை 609001

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முதற்பதிப்பு	:	2024
வெளியீடு நாள்	:	02.02.2024
இடம்	:	ஸ்ரீ கம்பகரேஸ்வரசுவாமி தேவஸ்தானம் திருபுவனம், திருவிடைமருதூர் வட்டம் தஞ்சாவூர் மாவட்டம்
பதிப்பகம்	:	ஞானசம்பந்தம் பதிப்பகம் தருமபுரம் ஆதீனம் மயிலாடுதுறை
உரிமை	:	தருமை ஆதீனம்
பக்கம்	:	xvi + 220
நூலின் அளவு	:	டெம்மி (1/8)
தாள்	:	மேப் லித்தோ (70gsm)
வடிவமைப்பு	:	தருமை ஒலி, ஒளிப் பதிவகம்.

விலை தனிப்பிரதி : உரு. 100/.
ப.தி. முழுத்தொகுப்பு : உரு. 800/.

பன்னிரு திருமுறை முழுத்தொகுப்பு மூலம் மட்டும்
(எட்டு நூல்கள்) மிகமிக குறைந்த விலையில்
உரு. 800/-க்கு கொடுக்கப்படுகிறது.
இத்தொகையும் மறுபதிப்பு செய்வதற்கு பயன்படுத்தப்படும்.

நூல் கிடைக்குமிடம்

தருமை ஆதீனம் நூல் நிலையம்
தருமபுரம் அஞ்சல், மயிலாடுதுறை மாவட்டம் - 606 001
தமிழ்நாடு, இந்தியா

அலைபேசி - 98946 82337

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதீன குருமுதல்வர்



'திருமுறைகளோதாய் மனமே உனக்கென்ன வாய்'

என்று அருளிய

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam, Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம் 27 ஆவது குருமகாசந்நிதானம்

திருமுறைச் செப்பேடு கண்டெடுத்த

ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம்

27 ஆவது குருமகாசந்நிதானம்

திருமுறைச் செப்பேடு கண்டருளிய

ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

ஆசியுரை

"ஞாலம் நின் புகழே மிக வேண்டும்தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே"

ஆசையறாய் பாசம் விடாய் ஆன சிவபூசை பண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் - சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்

- சிவபோக சாரம்

முழுமுதற் கடவுளாகிய பரசிவத்திற்கு சொரூபம், தடத்தம் என்று பதி இலக்கணம் உண்டு. தன்னிலையில் சுட்டொணாத் தன்மையில் சொரூபமாகவும், ஆன்மாக்கள் ஈடேற்றம் பெற அருள் காரணமாக ஐந்தொழில் புரிவதற்கு தடத்த வடிவமாகவும் இறைவன் விளங்கு கின்றான். இதனை சிறப்பு, பொது என்பர். தன்னிலை, முன்னிலை, படர்க்கை என்று இறைவன் எங்கும் எப்பொழுதும் நிறைந்து விளங்குவதை "ஒன்றாய், உடனாய், வேறாய் என்ற வகையில் தோத்திர சாத்திரங்கள் காட்டுகின்றன. இதனை "தோடுடைய செவியன்" என்று பெருமானின் அடையாளங்களை சுட்டிக்காட்டியும், "உள்ளம் கவர்கள்வன்" என்று ஒன்றாய் உறைவதையும், "பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே" என்று முன்நின்று அருளுவதையும் முதல் தேவாரத்திலேயே திருஞானசம்பந்தர் பாடி அருளி, பின்னும் "ஈறாய் முதல் ஒன்றாய் ...... வேறாய் உடனானான்" என்றும் காட்டுகின்றார். அருள் வடிவங்கள் குரு, இலிங்க, சங்கமம் என்று மூவகையாகும். ஞானம் வழங்குதல் பொருட்டு குருவுருவாகவும், அற, மறக் கருணை புரிய வேக, போக, யோக வடிவங்களாகவும், அடியார்களை ஆட்கொள்ள சங்கம வடிவமாகவும், திருவேடமாகிய பூதி, கண்டிகை, திருவைந்தெழுத்தின்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சொரூபமாகவும் சிவபெருமான் விளங்குகின்றான். அவனை நாம் தரிசிப்பதற்கு மூர்த்தி, தலம், தீர்த்தத்தால் சிறப்புடைய திருத்தலங்கள் தோறும் காட்சித்தருகின்றான். அவனை நாம் அடைவதற்கு தடையாக உள்ள ஆசை, முப்பாசம், சினம் என்ற குற்றங்களை நீக்கி எளிதில் இறைவனை பற்றுவதற்குக் காயத்தால் சிவபூசை செய்தும், மனத்தால் திருவைந்தெழுத்தை ஓதியும், வாக்கினால் திருமுறைகளைக் கொண்டு துதித்தும் வழிபடுவதே நல்வாயிலாகும் என்று நமது ஆதி பரமாசாரியார் அருளுகின்றார்கள். "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" என்று வள்ளுவர் வாக்கும் காட்டுகிறது. இதில் முதல் நிலை திருத்தல வழிபாடு, திருமுறை ஓதுதல் ஆகியவை, அதன் பயனாக சரியை,கிரியை,யோகமாகிய தவமும் தவத்தின் பயனாக ஞானகுருவின் தரிசனம் கிடைக்கும். குருவின் வாயிலாக மந்திர உபதேசமும், சிவஞானமும், சிவபூசையும் வாய்க்கும். இதனானே வீடாகிய முத்தியும், பேறாகிய சித்தியும் பெறற்குரியவாம் என்பதனை,

தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம் - நெல்லை களர்
காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்.

என்று நமது ஆதி பரமாசாரியாரும்,

"மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய் தொடங்கினர்க்கு ஓர் வார்த்தை சொல்ல சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்று வழியடியாரும் அருளியுள்ளார்கள். 'திருமுறையில் தொடங்கினால் திருவடியில் சேரலாம்' என்பதை இதனால் உய்த்துணரலாம்.

திரு - நிலைத்த செல்வம், முறை - திருவை அடையச்செய்யும் நூல்; திருமுறை என்பதாகும். வீடடைதல் நூற்பயனே என்பதும் இலக்கண விதி. திரு என்பது சிவமே ஆம் என்பதை "சிவமே பெருந்திரு எய்திற்றிலேன்" என்று திருவாசகம் காட்டும். "திருநின்ற செம்மையே செம்மை" என்று ஆரூரர் காட்டுகின்றார். திரு என்ற சொல்லிற்கு உண்மை, அறிவு, ஆனந்தம் என்ற மூன்று பொருளும் உண்டு. இதனை சத்து, சித்து, ஆனந்தம் என்று நான்மறை முடிபும் காட்டுகிறது. இதனை உணர்த்தும் திருவுருவே சோமாஸ்கந்த வடிவாகும். திருபுவனத்தில் அமைந்த மூலவர் விமானத்திற்கும் 'சச்சிதானந்த விமானம்' என்று கல்வெட்டுச் சான்று காட்டுகின்றது. உண்மை - இயல், வாய்மை - இசை, மெய்மை - மெய்ப்பாடு என்று மும்மைத் தமிழும் இவ்வகையாகவே அமைந்துள்ளது. "முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்" என்று அப்பரும், "முத்தமிழ் நான்மறை ஓம்பு தன்மையன்" என்று சம்பந்தரும் , "சதாசிவந் தத்துவம் முத்தமிழ் வேதம்" என்று திருமூலரும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அருளியுள்ளனர். அருணைக்கலம்பகத்தில், “நான்மறைச் செம்பொருள் வாய்மை வைத்த சீர்திருத்தேவாரமும் திருவாசகமும்” என்று நமது ஆதீன ‘நாவலர்’ எல்லப்பர் கூறுகின்றார்.

முத்தமிழும் சங்க காலத்தில் உலகியல் அகப்புறத்தை அறைந்தன. அதன்பின் அறம் உரைத்தன. சமயாசாரியார் காலத்தில் தான் உண்மைப் பொருளை ஓதும் தகையன ஆகியது என்பதை சேக்கிழார், “தமிழ்செய் தவம் நிரம்ப முத்தமிழ்விரகர் சம்பந்தர் திருஅவதாரம் செய்தார்” என்று காட்டுகின்றார். ஆகையினால் பக்தி இலக்கியக் காலமே தமிழின் பொற்காலமாகும். பன்னிரு திருமுறைகளில் பதினொன்றாம் திருமுறை இயற்றமிழாகிய பிரபந்த வகையாகவும், மூவர் தமிழும், திருஇசைப்பாவும் இசைத்தமிழ் வகையாகவும், தொண்டர்ப் புராணம் நாடகத்தமிழாகவும், கோவைத்திருவாசகமும் அருளியல் அகப்புறத்து வகையன, திருமூலர் சொல் சாத்திரமாகவும் அமைந்துள்ளது பெரும் சிறப்பாகும். இவற்றை நீதி நூல்களும் எழுத்தறிவிக்கும் பொழுதே ஓதி உணர்ந்திட வேண்டுமென்று காட்டுகின்றன. “தேவர் குறளும் திருநான் மறை முடிவும் மூவர் தமிழும் முனிமொழியும் கோவை திருவாசகமும், திருமூலர் சொல்லும் ஒரு வாசகம் என்றுணர்” என்று நல்வழியும், “வில்வம் அறுகுக்கு ஒவ்வா மென்மலர்கள் நால்வர் என்னும் நல்அன்பர் சொற்கொவா நான்மறைகள்” என்று நீதி வெண்பாவும் கூறுகிறது.

திருமுறை என்ற சொல்வழக்கம் பன்னெடுங்காலமாக பயிலப்பட்டு வருகிறது. “சாற்று மெய்ப்பொருள் தரும் திருமுறையினை” என்று சம்பந்தர் புராணத்திலும், “திருமுறை எழுதுவோர் வாசிப்போர்” என்று காழிக்கணநாதர் புராணத்திலும் சேக்கிழார் காட்டுகின்றார். கருவூர் தேவர் திருவிசைப்பாவில் “பந்தமும் பிரிவும் தெரிபொருட்பனுவல் படிவழி சென்று சென்றேறிச் சிந்தையும் தானும் கலந்ததோர் கலவி” மும்மலங்களை நீக்கவும் வீடுபேறு அடைவதற்குரிய முறையினை தெரிக்கின்ற பாடல்கள் இவை என்கிறார். இதுபோல் “காமம் சான்ற கடைக்கோட் பனுவல்” என்று கோவையாரை குமரகுருபர முனிவரும் காட்டியுள்ளார். “பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள் சூடுமின் சென்னி வாய் தோத்திரம் சொல்லுமே” என்று திருமூலர், குருவாக எழுந்தருளுகின்ற திருவருட்சக்தியே திருமுறையாகும் என்கிறார். இவ்வாறே “குருவின் திருவுருக் கொண்டு ஆறாத இன்ப சுகாதீதம் நல்கினள் அம்பிகையே” என்று புவனாம்பிகை சதகம் சாற்றுகிறது. ஞானசம்பந்தர் “அரத்துறை அடிகள் தம் அருளை முறைமையாக சொன்ன பாடல்” என்றும், “தமிழ் மாலை பாடுவித்து என் சிந்தை மயக்கறுத்த திருவருளினானை” என்று அப்பரடிகளும் அருளியுள்ளனர், அவ்வழியே நமது ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பரமாசாரிய சுவாமிகளும் "திருமுறைகளோ தாய்" என்று காட்டியுள்ளார். ஞானசம்பந்தர் அருள் வரலாற்றிலும், பெருமான் ஆணையிட பெருமாட்டி "திருமுலைப்பால் சுரந்தளித்து" திருமுறை பாடுவித்த அருளிபாட்டை காணலாம்.

தருமை ஆதீனம் 4ஆவது குருமகாசந்நிதானம், அடியார்கள் தங்களுடைய திருவடியில் அர்ச்சித்த மலர்களை திருமுறை ஏட்டின் மீது தரிசிக்கக் காட்டி திருமுறையும் குருவடிவமும் ஒன்றே என்று நிரூபணம் செய்திருக்கின்றார்கள். "ஐந்து பேர் அறிவும்" என்ற பன்னிரண்டாம் திருமுறைப் பாடலின் அனுபவப்பொருளை வினாவியே குமரகுருபரரை தடுத்து ஆட்கொண்டவர்கள்.

சிவபெருமான், மறைத்திறத்தை ஆன்மாக்களின் தகுதிக்கேற்ப உள்நின்று உணர்த்தியும், வேதாகமமாக உற்ற ஐம்முகங்களால் பணித்தருளியும், பராவு சிவராக எழுந்தருளிய சமயாசாரியார் வாக்கினால் திருமுறைகளாக திருவாய் மலர்ந்தும் அருளியுள்ளான். இவை அனைத்தும் பதிஞானமாகும், பரபோகத்தை உய்க்கச் செய்யவல்லது. இவற்றை 'பரமாப்த வாக்கியம்' என்று மரபுணர்ந்தோர் போற்றுவர். இவற்றின் புடை, சார்பு நூல்களே மற்றவை என்பதால் தருமை ஆதீனம் 26ஆவது குருமணிகள் வேதம் முதலாக ஆகம, புராண, இதிகாச, திருமுறைத்தோத்திர, சித்தாந்தச்சாத்திர, பண்டாரச்சாத்திரம் ஈறாக அனைத்தையும் மரபு மாறாமல் பாதுகாத்திட வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டருளினார்கள்.

இம்மரபு உணராத ஆன்மானந்தவாதியை நிராகரிப்பதற்கு நமது ஆதி பரமாசாரியார் 'முத்தி நிச்சயம்' என்ற நூலில்,

சந்தான நற்குரவர் தக்கோர் பிறர் சமயம்
நந்தாது தோற்றுவித்த நற்குரவர் - முந்தவே
எந்த முத்தி சித்தாந்தம் என்றார்கள் சைவத்தில்
அந்த முத்தி நிச்சயிப்போம் யாம்

என்று தாபித்து அருளுகின்றார்கள். இதற்கு முத்தி நிச்சயப் பேருரையில் (முதல் திராவிட மாபாடியம்) வெள்ளியம்பலவாண முனிவர் விரிவாக விளக்கம் கண்டுள்ளார் ஆண்டு காண்க.

"கண்ட பெரு மந்திரமே மூவர் பாடல்" என்று உமாபதி சிவம் காட்டி, பின்னும் முதல் ஏழு திருமுறைகளை வேதத்தின் சாரமான சப்தகோடி மகாமந்திரங்களாகவும், பதினொரு திருமுறைகளை சிவாகமத்தின் முடிவான பஞ்சபிரம்ம சடங்க மந்திர ரூபமாகவும், 'தோடுடைய செவியன்' முதல் 'உலகெலாம்' ஈறாக வகுக்கப்பட்ட பன்னிரு திருமுறைகளை பிரணவ சொரூபமாகவும் விளங்குவதாக,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மந்திரங்கள் எழுகோடி ஆதலினால் மன்னுமவர்
இந்த வகை திருமுறைகள் ஏழாக எடுத்தமைத்துப்
பந்தமுறு மந்திரங்கள் பதினொன்றும் ஆதலினால்
அந்தமுறை நான்கினொடு முறைபதினொன்றாக்கினார்.

மன்னுதமிழ் விரகரெங்கள் காழிவேந்தர் வகுத்தருளால்
அமைத்த திருமுறை ஓர் மூன்றும்
அன்னவகை வாகீசர்முறை ஓர் மூன்றும்
ஆரூரர் உரைத்த திருமுறைய தொன்றும்
துன்னவகை ஏழாகத் தொகுத்துச் செய்தான்
தூய மனு எழுகோடி என்பதுன்னி
தன்னிகரில் திருவருளால் மன்னன் தானும்
தாரணியோர் வீடு பெறுந்தன்மை சூழ்ந்தே.

என்று எடுத்துக்காட்டுகின்றார்.

சிவாகமம் காட்டுகின்றவாறு திருவாசக நூலில் சிவபுராணம் முதற்பகுதியில் வாழ்க ஆறும், வெல்க ஐந்தும், போற்றி எட்டும் என்ற எண்ணிக்கையில் சடங்க, பஞ்ச பிரம்ம, அட்டபுஷ்ப அர்ச்சனை மந்திரமாக அமைந்துள்ள நயத்தைக் காணலாம். திருவாசகப் பாடல் தொகையும் 658 ஆகவே அமைந்துள்ளது.

கபில தேவர் பதினொன்றாம் திருமுறையில், "நூறுஆன் பயன் ஆட்டி நூறு மலர் சொரிந்து நூறா நொடிவதனின் மிக்கதே நூறா உடையான் பரித்தவெரி உத்தமனை வெள்ளேறுடையானைப் பாடலால் ஒன்று" என்று திருமுறை ஓத வேண்டிய கடப்பாட்டை உணர்த்துகின்றார்.

திருமுறைகள் நமக்கு இகபரசுகத்தை அளிப்பவை என்பதனை, "இம்மையே தரும் சோறுங் கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம் அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே" என்று சுந்தரர் அருளியுள்ளார். திருப்பதிகங்கள்தோறும் திருக்கடைக்காப்பில் பாராயணப் பயன் கூறுவதை திருஞானசம்பந்தர் வழக்கமாகக் கொண்டுள்ளார். அதில் பிணி, நோய், பாவம், பழி, இடர், துயர், கவலை, துன்பம், தீவினை, நல்வினை, தொல்வினை, துரிசு, குற்றம், செற்றம் அனைத்தும் நீங்கும், இதற்கு மறுதலையாக மருந்து, மந்திரம், புண்ணியம், இன்பம், நல்வினை, நலம், வீடு, பேறு, பரிசு, இம்மை, மறுமை, செல்வம் வேண்டியவை அனைத்தும் பெறலாம் என்று காட்டியுள்ளார். எடுத்துக்காட்டாக "உரை நலமலி ஒருபதும் நவில்பவர் நிகழ்குல நிலநிறை திருவுரு நிகரில கொடைமிகு சயமகள் புகழ்புவி வளர்வழி அடிமையின் மிகைபுணர் தரநல மிகுவரே", "தானுறு கோளுநாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரைசெய் ஆனசொல் மாலை யோதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே" என்று பாடியதை காணலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அருமறையைச் சிச்சிலிபண்டருந்தத்தேடும்
அதுபோல என்றும் உளதாம் உண்மைப்
பரபதமும் தற்பரமும் பரனே அன்றிப்
பலரில்லை என்றெழுதும் பனுவல் பாரின்
எரியினிடை வேவாது ஆற்றெதிரேயோடும்
என்புக்கும் உயிர்கொடுக்கும் இடுநஞ்சாற்றும்
கரியை வளைவிக்கும் கல் மிதக்கப் பண்ணும்
கராமதலை கரையில் உறக்காற்றும் காணே.

என்று திருமுறைப் பெருமையினை உமாபதி சிவமும் எடுத்துரைக்கின்றார்.

தருமையாதீனத்தில் தான் திருமுறைகள் ஓலைச்சுவடிகளிலும், செப்பேடுகளிலும், கையெழுத்து பிரதியாகவும், பழைய அச்சு இயந்திர பதிப்பாகவும், நவீன கணினியில் செய்த பதிப்பாகவும், மின்னம்பல இணையதள பக்கமாகவும், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப இன்றைய தலைமுறையினர் பயன்படுத்துவதற்குரிய முறையில் பன்னிரு திருமுறை களையும் பதிநான்கு சித்தாந்தச் சாத்திரங்களையும் உரையோடும் இதன் மூலப் பனுவல்களை 12 மொழிகளில் மொழிபெயர்ப்பும் ஒலிபெயர்ப்பும் செய்து கைபேசிச் செயலியாகவும், கைபேசியில் மிகவும் குறைந்த இடத்தை மட்டுமே எடுத்துக் கொண்டு, ஒருமுறை பதிவிறக்கம் செய்தபின், பிறகு இணையதள வசதி இல்லாமலேயே பயில்கின்ற வகையில் வெளியிட்டு இருக்கின்றோம்.

ஆதீனத்தில் பழைய கல்வெட்டுச் செய்திகளுக்கு ஏற்ப இன்றும் பதிகமாக ஓதுகின்ற வழக்கம் இருக்கின்றது. அபிஷேக நேரத்திலே முழு பதிகத்தையும் பண்ணோடு பாடுகின்ற மரபு கைக்கொள்ளப் படுகின்றது. இதுபோலவே ஆதீனத் திருக்கோயில்களில் பழமை மாறாமல் திருவீதிகளில் திருமுறைப் பாராயணம் செய்கின்ற பணி மேற்கொள்ளப் படுகின்றது. எங்கும் இலாத வகையில் தருமை ஆதீனத்திலே தான் திருமுறைப் பாடுகின்ற ஓதுவார்களுக்கு இண்டை சாற்றுதல் என்ற முறைமை செய்யப்பட்டு, அதன் பின்னரே அவர்கள் அங்கே ஓதுவதற்கு அனுமதிக்கப்படுவது சம்பிரதாயமாக உள்ளது.

திருமுறை பாராயணம் செய்வது ஒவ்வொரு சைவ சமயத்தாரின் நித்திய கடமையாகும். நாமும் துறவறம் மேற்கொள்வதற்கு வழி அமைத்தது "எத்தாயர் எத்தந்தை" என்ற தேவாரக் குறிப்பிருந்த தாளாகும். துறவறம் ஏற்றது முதல் நாள்தோறும் ஐந்து திருப்பதிகங்களை ஓதி வருகின்றோம். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற நன்னோக்கத்தினால் சீர்காழி குடமுழுக்கு விழாவை முன்னிட்டு 'ஒரு கோடி முறை' திருவெழுகூற்றிருக்கை பதிகத்தினை பாராயணம் செய்ய பணித்தோம், அதற்கு இசைய உலகத்தில் உள்ள அனைத்துத் தரப்பினரும் திருப்பதிகப் பாராயணம் செய்தனர். அதன் பயனாக சீர்காழியில் நமது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில் வளாகத்தில் 16.04.2023 அன்று வரலாற்றில் முதல் முறையாக தேவாரம் எழுதியச் செப்புப் பட்டயங்கள் பெருவாரியாக நல்ல நிலையில் கிடைத்துள்ளது திமுறைப் பாராயணத்திற்கு உறுதியாகப் பலன் உண்டு என்பதற்கு இந்நிகழ்வு சான்றாக அமைந்துள்ளது.

திருமுறைப் பாராயணம் செய்கின்றவர்கள் வசதிக்கு ஏற்ப் பன்னிரு திருமுறை 18,251 பாடல்களையும் ஒரே புத்தகமாக சீர்காழியில் வெளியிட்டோம். அன்பர்கள் வேண்டுகோளுக்கிணங்க செல்லுமிட மெல்லாம் எடுத்துச் சென்று பாராயணம் செய்யும் வண்ணம் தற்பொழுது ஒரே நூலை எட்டு பிரிவுகளாகப் பிரித்து திருஞானசம்பந்தர் திருக்கடைக்காப்பு முழுவதும் ஒரு நூல், திருநாவுக்கரசர் தேவாரம் முழுவதும் ஒரு நூல், சுந்தரர் திருப்பாட்டு முழுவதும் ஒரு நூல், மாணிக்கவாசகர் திருவாசகமும், திருக்கோவை யாரும் ஒரு நூல், திருவிசைப்பா திருப்பல்லாண்டு முழுவதும் ஒரு நூல், திருமூலர் அருளிய திருமந்திரமாலை முழுவதும் ஒரு நூல், பதினொன்றாம் திருமுறை நாற்பது பிரபந்தங்களும் ஒரு நூல், சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம் முழுவதும் ஒரு நூல் என்று 3202 பக்கங்கள் கொண்ட தொகுப்பினை திருபுவனம் ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி சமேத ஸ்ரீ கம்பஹரேஸ்வர சுவாமி, ஸ்ரீ சரபேஸ்வரர் திருக்கோயில் மகாகும்பாபிஷேகப் பெருவிழாவில் வெளியிடுகின்றோம். இந்த எட்டு நூல் தொகுதிகளை தருமை ஆதீன ஒளிப்பதிவகத்தில் வடிவமைத்து, தருமையாதீன ஞானசம்பந்த பதிப்பகத்தால் அச்சிட்டு வெளியிடுவதற்கு ஆகும் பெரும்பொருட் செலவினை சென்னை AUTOTECH INDUSTRIES PRIVATE LIMITED, நிறுவனத்தார், தொழிலதிபர் 'திருப்பணிச்செம்மல்' திரு.கே.எஸ்.ஜெயராமன், திருமதி.பிருந்தா ஜெயராமன், அவர்கள் குடும்பத்தார் ஏற்றுப் போற்றியுள்ளார்கள். அவர்கள் தருமை ஆதீனத்தின் திருக்கோயில் புனரமைப்புத் திருப்பணிகளில் தொடர்ந்து பங்குகொண்டு வருகிறார்கள். ஆதீன நிகழ்வுகளில் இடைவிடாது கலந்துகொண்டு சிறப்பித்தும் வருகின்றார்கள். அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தார் களுக்கும் எல்லா நலன்களும் வளங்களும் பெருக ஆசிர்வதிக்கின்றோம். மெய்யன்பர்கள் இந்த தொகுப்பினை வாங்கி பயன்பெறும் வகையில் மிக குறைந்த விலையில் கொடுக்கப்படுகின்றது. அன்பர்கள் வாங்கி பாராயணம் செய்யவும். திருமுறைகளை இடையறாது நாளும் ஓதுகின்ற அனைவரும் குறைவிலாத பெருவாழ்வு பெற்று உய்ய செந்தமிழ்ச் சொக்கநாதப் பெருமான் திருவடிகளை சிந்திக்கின்றோம்.

திருச்சிற்றம்பலம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வரலாறு

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்தி டாமல்
தாரணிஅன் பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

- ஸ்ரீ சம்பந்தசரணாலயர்.

ஸ்ரீ வில்லிபுத்தூரில் கார்காத்த வேளாளர் குலத்திலே சுப்பிரமணியப் பிள்ளைக்கும் மீனாட்சியம்மைக்கும் அருந்தவ மகவாக அவதரித்தார் குருஞானசம்பந்தர். மதுரையம்பதிக்குத் தம் பெற்றோருடன் சென்று குலதெய்வமாகிய ஸ்ரீ சொக்கநாதரை வழிபட்டார். திருவருளால், பொற்றாமரைக் குளத்தின் ஈசானமூலையில் பெட்டகக் கோயிலுடன் சொக்கநாதர் கண்ணுக்கினிய பொருளாகக் கைவரப் பெற்றார். சொக்கேசன் அருளால் திருவாரூர் சென்று ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகரை வணங்கிச் சிவஞான உபதேசம் பெற்றார்; சொக்கநாதர் பூசையும், எழுந்தருளச் செய்து கொடுக்கப்பெற்றார். குருவாணைப்படித் தருமபுரத்தில் ஞானபீடத்தை நிறுவி பக்குவான்மாக்களுக்கு ஞானோபதேசம் செய்து சைவ சித்தாந்தத்தைப் பரவச்செய்தார்.

ஸ்ரீ சொக்கநாதர் மீது சொக்கநாத வெண்பாப்பாடித் துதித்தார். சிவபோகசாரம், முத்தி நிச்சயம். சொக்கநாதக் கலித்துறை, ஞானப்பிரகாசமாலை சோடசகலாப்பிராசாத சட்கம், திரிபதார்த் தருபாதி தசகாரிய அகவல், நவரத்தினமாலை ஆகிய நூல்களையும் அருளி இவ்வாறு பல்லாண்டுக்காலம் ஞான அரசாட்சி புரிந்து சிவலிங்கத் திருவுருவின் கீழ் சீவசமாதி கூடினார் ஸ்ரீகுருஞான சம்பந்தர். அவர் சீவசமாதி கூடிய குருமூர்த்தமே தற்பொழுது ஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலாக விளங்கி வருகிறது. கி.பி. 16ம் ஆம் நூற்றாண்டில் ஸ்ரீகுருஞான சம்பந்தரால் தோற்றுவிக்கப்பெற்ற இத்தருமையாதீனத் திருமடம் மொழித்தொண்டும் சமயத் தொண்டும், சமூகத் தொண்டும் ஒல்லும் வகையெல்லாம் ஆற்றி வருகின்றது. ஸ்ரீ குருஞான சம்பந்தரது பரம்பரையில் தற்பொழுது 27 ஆவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருப்பவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சுந்தரமூர்த்தி நாயனார் அருள்வரலாறு

கயிலையில் சுந்தர்

சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஆலால சுந்தரர் என்ற திருப்பெயரோடு. திருக்கயிலாயத்திலே சிவபெருமானுக்கு உடனிருந்து பணிவிடை புரிவதாகிய அணுக்கத்தொண்டு ஆற்றி வந்தார். அதுபோல், உமாதேவியாருக்கு அநிந்திதை, கமலினி என்ற இரு சேடியர்களும் அணுக்கத் தொண்டாற்றினர். இவர்கள் நாள்தோறும் மலர் கொய்து இறைவனுக்கும் உமாதேவியாருக்கும் சார்த்தி வந்தனர். ஒருநாள் மலர்கொய்யும் தொண்டாற்றுகையில் ஆலால சுந்தரர் அநிந்திதை, கமலினி என்பார் மீது மனம் போக்கினார். அவர்களும் இவர் மீது இச்சை கொண்டனர். எல்லாம் வல்ல இறைவன் இதனை அறிந்து, "ஆலால சுந்தர! நீ பெண்கள் மீது இச்சை கொண்டமையால் பூவுலகத்தில் மனிதனாகப் பிறந்து அப்பெண்களுடன் இன்புறுவாயாக!" எனக் கட்டளையிட்டார். அது கேட்ட சுந்தரர் வருத்தமுற்றவராய் "அடியேன் மானுடவாழ்வில் மயங்கத் தலைப்படும் பொழுது தேவரீர் தடுத்து ஆட்கொண்டருள வேண்டும்" எனப் பிரார்த்தித்தார். அண்ணலும் அவ்வாறே வரம் தந்து அனுப்பினார்.

ஆவணம் காட்டி ஆட்கொள்ளல்

ஆலால சுந்தரர் நடுநாட்டிலே திருநாவலூரிலே, ஆதிசைவ அந்தணர் மரபிலே, சடையனார், இசைஞானி அம்மையார் என்ற அருந்தவத்துப் பெரியவர்கட்கு மகவாய் அவதரித்தார். பெற்றோர்களால் நம்பியாரூரர் என்ற பிள்ளைத் திருநாமம் இடப் பெற்றார். பரமன் அருளால் பல கலைகளையும் பயின்றார். நடுநாட்டு மன்னரான நரசிங்கமுனையரையரின் அபிமான புத்திரராய், மன்னவர் திருவும் வைதிகத் திருவும் பொங்க வளர்ந்து வந்தார். மணப்பருவம் உற்றார், புத்தூர் சடங்கவி சிவாசாரியாருடைய திருமகளைப் பெரியோர் மணம் நேர்ந்தனர். புத்தூரிலே திருமணவிழாத் தொடங்கியது. கண்ணுதற் பரம்பொருள் திருக்கயிலையில் வரமளித்தபடியே சுந்தரரைத் தடுத்தாட்கொள்ள வேண்டி விருத்த வேதியராய்த் திருமணப் பந்தலில் எழுந்தருளினார். அங்குக் கூடியிருந்த அந்தணர் அனைவரும் அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். வந்தவர் நம்பியாரூரரை நோக்கி, "எனக்கும் உனக்கும் இடையே ஒரு வழக்கு உள்ளது. அவ்வழக்கு, நீ

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எனது அடிமை என்பதேயாகும். அதனை முடித்தே மணம் தொடங்க வேண்டும்" என உரைத்தார். அது கேட்ட அனைவரும் அதிசயித்தனர். நம்பியாரூரர் விருத்த வேதியரை நோக்கி, ஓர் அந்தணர் மற்றோர் அந்தணருக்கு அடிமையாதல் நீர் சொல்லத்தான் கேட்டேன். இவ்வாறு சொல்லும் நீர் பித்தரோ என வெகுண்டு பேசி அவர் கையிலிருந்த ஓலையைப் பற்றிக் கிழித்தெறிந்தார். வேதியர் இது முறையோ எனக் 'கூக்குரலிட' அப்போது அங்கிருந்தோர் உமது ஊராகிய திருவெண்ணெய் நல்லூர் மறையவர்களிடத்திலேயே இவ்வழக்கைத் தீர்ப்போம் என்றனர்.

தடுத்தாட் கொள்ளல்

அவ்வண்ணமே, மூல ஓலை காட்டி ஆரூரர் அடிமை என்பதை வேதியர் நிரூபிக்க, சுந்தரர் அடிமை நிலையை ஏற்றார். வேதியரின் இருப்பிடம் வினவினார். கிழவேதியர் திருவெண்ணெய்நல்லூர் அருட்டுறை ஆலயத்துட்புகுந்தார். பின்தொடர்ந்த மறையவர்கள் திகைத்தனர். அதுகண்ட சுந்தரரும் வியப்புற்றார்.'திருக்கயிலையில் கூறியபடி உன்னைத் தடுத்தாட் கொண்டோம்" என மொழிந்து இறைவன் காட்சி வழங்கினார். உண்மை உணர்ந்த சுந்தரர் அப்போது வழியடிமை யாது செய்ய வேண்டுமென வேண்டினார். "வன்மைபேசி வன்றொண்டன் எனும் பெயர் பெற்றாய், நமக்கு அன்பின் பெருகிய அருச்சனை (பாட்டேயாகும். ஆதலால் மண்மீது நம்மை சொற்றமிழ் பாடுக" என ஆணையிட்டார். அது கேட்ட சுந்தரர் எப்படிப் பாடுவேன் என ஏங்கினார். பக்தர்கள் அறிய "என்னைப் பித்தனென்றே பாடுக' என அடியெடுத்துக் கொடுத்தார். அவ்வடியை முதலாகக் கொண்டு 'பித்தா பிறைசூடி' என்னும் பதிகம் பாடினார்.

சித்தவட மடத்தில் திருவடி கட்டுதல்

பிறகு சுந்தரர் திருநாவலூரைத் தரிசித்துக் கொண்டு திருத்துறையூர் சென்று இறைவனை நோக்கித் தவநெறியருள வேண்டினார். அப்பர் சுவாமிகள் திருத்தொண்டு செய்த இடமாகிய திருவதிகையை மிதித்தற்கு அஞ்சி அதனருகில் சித்தவடம் மடத்தில்

இரவு தங்கி நித்திரை செய்கையில் அதிகைப்பெருமான் கிழ வேதியராய் அருகில் படுத்துத் திருவடி சூட்டி செய்தனர். பின்னர் சிதம்பரம் அடைந்து கூத்தப்பெருமான் குஞ்சித சரணம் கும்பிட்டார். பெருமான் கட்டளைப்படித் திருவாரூர் செல்லும் வழியில் சீகாழியைக்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குறுகினார். திருஞானசம்பந்தர் அவதாரமான திருத்தலமாதலால் அதனை மிதிக்க அஞ்சினார். ஊர்ப்புற எல்லையை வலம் வந்தார். இறைவன் காதில் வெண்குழையனாய்க் காட்சி நல்கியதைத் தரிசித்தார்.

தம்பிரான் தோழரானார்

பின்னர்ப் பல தலங்களைத் தரிசித்துத் திருவாரூர் சேர்ந்து வன்மீகநாதரைத் தரிசித்தார். அப்பெருமான் "உனக்கு நம்மைத் தோழனாகத் தந்தனம், நீ கொண்ட மணக் கோலத்துடன் எப்பொழுதும் இருப்பாயாக" என அருள் செய்தார். அன்று முதல் தம்பிரான் தோழராக, தியாகேசப் பெருமானைத் தரிசித்து வந்தார். அப்போது கயிலையிலிருந்த கமலினி என்பார் அவ்வூர் உருத்திர கணிகையர் குலத்தில் பரவையார் என்ற பெயருடன் தோன்றி நாள்தோறும் தியாகேசப் பெருமானைத் தரிசித்து வந்தார். ஒருநாள் இருவரும் திருக்கோயிலில் சந்தித்து ஒருவரையொருவர் நேசித்தனர். இறைவன்திருவருளால் இருவருக்கும் மணம் நிகழ்ந்தது. பரவையாருடன் வாழ்ந்து வந்த சுந்தரர், தேவாசிரியமண்டபத்தில் சிவனடியார்கள் இருந்ததைக் கண்டு அவர்களுக்கு அடியனாகும் நாள் எந்நாளோ என எண்ணியவராய், சுவாமி தரிசனம் செய்தார். இறைவன், "நீ நம்முடைய அடியவர்களைப் பாடுக" எனப் பணித்துத் "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்னும் முதலடி எடுத்துக் கொடுத்தனர். அதனையே முதலாகக் கொண்டு திருத்தொண்டத் தொகை பாடினார். பின்னர்க் குண்டையூர் கிழார் என்னும் வேளாளர் அரிசி முதலிய பொருள் கொடுத்துத் தொண்டு செய்துவர, அது பஞ்சத்தால் தடைப்பட்ட போது கிழார் இறைவனைப் பிரார்த்தித்தார். குண்டையூர் முழுவதும் நெல்மலையாய் நிறைந்தது. இதனை அறிந்த சுந்தரர் அவற்றைத் திருவாரூர் கொண்டுபோக ஆளின்மையால் 'நீள நினைந்தடியேன்' என்ற திருப்பதிகத்தைப் பாடிப் பூதகணங்களால் நெல்மலை திருவாரூர் வரப்பெற்றார். எல்லோரும் நெல் பெற்றனர்.

பொன் பெற்றார்

பிறகு திருநாட்டியத்தான்குடியில் கோட்புலி நாயனார். தம் புதல்வியர்களான சிங்கடியாரையும், வனப்பகையாரையும் மணம் செய்துகொள்ளுமாறு வேண்ட, அவ்விருவரையும் தம் புதல்வியர்களாக ஏற்றுப் போற்றினார். பிறகு பங்குனி உத்திரச்செலவுக்குப் பரவையார் பொன் வேண்டியதற் கிணங்கத் திருப்புகலூர் சென்றார். அங்குச் செங்கற்களைத் தலைக்கு வைத்து நித்திரை செய்தார். அவை பொன்னாக

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மாறின. அது கண்டு. "தம்மையே புகழ்ந்து" எனும் திருப்பதிகம் பாடித் திருவருளை வியந்தார். பின்பு பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு, திருப்பாண்டிக் கொடுமுடி சேர்ந்து, 'மற்றுப்பற்றெனக்கின்றி' என்னும் நமச்சிவாயத் திருப்பதிகம் பாடினார். பின்னர்த் திருமுதுகுன்றத்தில் பழமலைநாதர் அருளிய பன்னீராயிரம் பொன்னை மணிமுத்தா நதியில் இட்டுத் திருவாரூர்க் கமலாயத்தில் பதிகம் பாடி எடுத்தார்.

சங்கிலியார் திருமணம்

பிறகு திருகுருக்காவூர் வெள்ளடையில், களைப்புற்ற தமக்கு இறைவன் பொதி சோறு கொடுத்து மறைந்த அருட்டிறத்தைப் புகழ்ந்து பாடினார். பிறகு தொண்டை நாட்டுத் தலங்கள் பலவற்றைத் தரிசித்துத் திருவொற்றியூரை அடைந்தார். கயிலையில் இருந்த அநிந்திதை ஒற்றியூரை அடுத்துள்ள ஞாயிறு என்ற ஊரில் ஞாயிறுகிழார் என்னும் வேளாளருக்குச் சங்கிலியார் என்ற பெயரோடு மகவாய்த் தோன்றி வளர்ந்து வந்தார். மணப்பருவம் உற்றும் ஒருவரையும் மணந்து கொள்ளாது இறைவனுக்குத் திருமாலை சாத்தும் தொண்டாற்றி வருகையில். சுந்தரர் அம்மாதினைக் கண்டு இச்சைகொண்டு இறைவனிடம் அவரைத் தமது மனைவியாக்கும்படி வேண்டினார். இறைவனும் இக்கருத்தை சங்கிலியாருக்குத் தெரிவித்து, அம்மையாரின் விருப்பத்திற்கிணங்க மகிழமரத்தடியில், சுந்தரரைக் கொண்டு, "உம்மைப் பிரியேன்" என்று அவரிடம் சபதம் செய்யச் செய்து தொண்டர்களைக் கொண்டு அவர்கட்குத் திருமணம் நிகழ்த்துவித்தார்.

கண் பெற்றார்

இவ்வண்ணம் சுந்தரர் இங்கு இருக்கும் நாளில், திருவாரூர் வசந்தவிழா நினைவிற்கு வர, "எத்தனை நாள் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே" என்று பாடியவராய் ஒற்றியூரை விட்டகன்றார். சபதம் தவறின மையால் கண்ணொளி இழந்தார். திருவெண்பாக்கத்தில், திருக்கோயில் உள்ளீரோ எனப் பாட இறைவன் 'உளோம் போகீர்' என்று ஊன்றுகோல் கொடுத்து உதவினார். பின்னர்க் காஞ்சிபுரத்தில் கச்சி ஏகம்பனைக் காண இடக்கண் பெற்றார். வழியில் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருவாரூர் சேர்ந்து 'மீளா அடிமை' என்ற பதிகம் பாடி வலக்கண்ணும் பெற்றார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சேரமான் தோழன்

சங்கிலியாரை மணந்ததைக் கேள்வியுற்ற பரவையார் ஊடல் கொள்ள, தியாகேசப் பெருமான் இருமுறை தூது சென்று ஊடலைப் போக்கினார். இந்நிகழ்ச்சியைத் தவறு எனக் கருதி ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்கு இறைவன் சூலைநோய் கொடுத்து அதைத் தீர்க்குமுகத்தால் சுந்தரருடன் நட்புகொள்ளச் செய்தார். சேரநாட்டு மன்னரான சேரமான்பெருமாள் நாயனார், சுந்தரருக்கு நண்பினரானதால் சேரமான் தோழரெனவும் சுந்தரர் அழைக்கப்பெற்றார். அதுமுதல் இருவரும் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு வெள்ளம் பெருகிய காவிரி வழிவிட திருவையாற்றுப் பெருமானைத் தரிசித்தனர். பிறகு சேரமான் நாட்டில் சிலகாலம் தங்கினார். திருவஞ்சைக்களத்தப்பனை வழிபட்டார். திருவாரூர்த் தியாகேசப் பெருமானைத் தரிசிக்க விரும்பினார்: சேரமான் பெருமாள் கொடுத்த பொருள்களைத் திருவாரூருக்கு எடுத்துச் சென்றார். செல்லும் வழியில் திருமுருகன் பூண்டியில் பூதகணங்களாகிய வேடர்கள் பொருள்களைக் கவர்ந்தமை கண்டு அவ்வூர்ப் பெருமானை 'எத்துக்கு இங்கிருந்தீர்' எனப் பாடிப் பொருளை மீண்டும் பெற்றுத் திருவாரூர் சேர்ந்தார்.

கயிலை மேவினார்

சிலநாள் கழித்துச் சேரமான் நாட்டிற்குச் செல்ல விரும்பினார். வழியில் கொங்குநாட்டுத் தலங்கள் சிலவற்றைத் தரிசித்துத் திருப்புக்கொளியூர் அவிநாசியில் முதலையுண்ட பாலனைப் பெற்றோர் மகிழ மீட்டுக் கொடுத்தார். பின்பு சேரநாடு அடைந்து சேரமான் பெருமாளுடன் வசித்து வந்தார். இப்படி இருக்கும் நாளில் ஒருநாள் திருவஞ்சைக்களம் சென்றார். உலக வாழ்வினின்றும் விடுபட விரும்புவதை விடையேறும் வித்தகனிடம் விண்ணப்பித்தார். விண்ணவர் பெருமானும் விருப்பத்தை

நிறைவேற்ற வெள்ளை யானையைத் தேவர்களுடன் அனுப்பினார். ஆடிச் சுவாதி நன்னாளில் வெள்ளை யானையின் மீது அமர்ந்து சேரமான் பெருமாளை நினைந்த வண்ணம் சுந்தரர் கயிலை சேர்ந்தார். இதனை யுணர்ந்த சேரமான் பெருமாள் குதிரையின் செவியில் ஐந்தெழுத்தோதிச் சுந்தரரைப் பின் தொடர்ந்து திருக்கயிலை மேவினார். பரவையாரும் சங்கிலியாரும் முன் போலவே கமலினி, அநிந்திதையாகக்

கயிலை சேர்ந்தனர். சுந்தரர் அருளிய திருப்பதிகங்கள் 100. இவை ஏழாந் திருமுறையாக இலங்குகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஏழாம் திருமுறை பண்கள் விவரம்

வ. எண்.	பண்	பதிகம்	பதிகம் மொத்தம்
1.	இந்தளம்	1 - 12	12
2.	தக்கராகம்	13 - 16	4
3.	நட்டராகம்	17 - 30	14
4.	கொல்லி	31 - 37	7
5.	கொல்லிக் கௌவாணம்	38 - 46	9
6.	பழம் பஞ்சுரம்	47 - 53	7
7.	தக்கேசி	54 - 70	17
8.	காந்தாரம்	71 - 75	5
9.	பியந்தைக் காந்தாரம்	76	1
10.	காந்தார பஞ்சமம்	77	1
11.	நட்டபாடை	78 - 82	5
12.	புறநீர்மை	83 - 85	3
13.	சீகாமரம்	86 - 89	4
14.	குறிஞ்சி	90 - 94	5
15.	செந்துருத்தி	95	1
16.	கவுசிகம்	96	1
17.	பஞ்சமம்	97 - 100	4
	மொத்தம்	100	100

சுந்தரர் வணக்கம்

நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணிகண்டத்
தீசன் அடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழவெடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
குருபாதம்

பன்னிரு திருமுறைப் பதிப்பு
திருப்பணி நன்கொடை

திருக்கயிலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம் 27 ஆவது குருமகாசந்நிதானம்

திருமுறைச் செப்பேடு கண்டெடுத்த
ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
திருவுளப்பாங்கின் வண்ணம்

திருக்கயிலாயப் பரம்பரை தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான

திருபுவனம் அறம்வளர்த்த நாயகி சமேத
ஸ்ரீ கம்பஹரேஸ்வர சுவாமி திருக்கோயில்
ஸ்ரீ சரபேஸ்வர சுவாமி திருக்கோயில்
மகாகும்பாபிஷேக விழாவில்



பன்னிரு திருமுறைகள் எட்டு நூல் பிரிவுகள் 3202 பக்கங்கள் கொண்ட தொகுப்பினை வெளியிடுவதற்கு ஆகும் பெரும் பொருட்செலவினை

"திருப்பணிச்செம்மல்"

தொழிலதிபர் திரு.கே.எஸ்.ஜெயராமன்.
திருமதி.பிருந்தா ஜெயராமன்.

(AUTOTECH INDUSTRIES i PRIVATE LIMITED,Chennai)

அவர்கள் குடும்பத்தார் ஏற்றுப் போற்றியுள்ளார்கள். இவர்கள், தருமை ஆதீன தேவஸ்தான திருக்கோயில் புனரமைப்பு திருப்பணிகளில் தொடர்ந்து பங்குகொண்டு சிவபுண்ணியத்தை செய்து வருவது சிறப்பிற்குரியது.

குறிப்பு

இத்திருமுறை பதிப்பின் விற்பனைத் தொகை மிகக் குறைந்த அடக்க விலையிலே கொடுக்கப்படுகின்றது. இத்தொகை மீண்டும் இத்திருமுறை தொகுப்பினை தொடர்ந்து வெளியிடுவதற்கு பயன்படுத்தப்படும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

குருபாதம்

திருச்சிற்றம்பலம்

பொருளடக்கம்

தேவாரத் திருத்தலங்கள்

1. திருவெண்ணெய் நல்லூர்	1
2. திருப்பரங்குன்றம்	4
3. திருநெல்வாயில் அரத்துறை	6
4. திருஅஞ்சைக்களம்	9
5. திருவோணகாந்தன்தளி	11
6. திருவெண்காடு	14
7. திருவெதிர்கொள்பாடி	16
8. திருவாரூர்	19
9. திருவரிசிற்கரைப்புத்தூர்	21
10. திருக்கச்சியனேகதங்காவதம்	24
11. திருப்பூவணம்	26
12. திருநாட்டுத்தொகை	27
13. திருத்துறையூர்	29
14. திருப்பாச்சிலாச்சிராமம்	30
15. திருநாட்டியத்தான்குடி	33
16. திருக்கலயநல்லூர்	36
17. திருநாவலூர்	38
18. திருவேள்விக்குடியும் திருத்துருத்தியும்	41
19. திருநின்றியூர்	42
20. திருக்கோளிலி	44
21. திருக்கச்சிமேற்றளி	45
22. திருப்பழமண்ணிப்படிக்கரை	47
23. திருக்கழிப்பாலை	48
24. திருமழபாடி	49
25. திருமுதுகுன்றம்	51
26. திருக்காளத்தி	52

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

27.	திருக்கற்குடி (உய்யக்கொண்டான் மலை)	54
28.	திருக்கடவூர் வீரட்டம்	55
29.	திருக்குருகாவூர் வெள்ளடை	56
30.	திருக்கருப்பறியலூர்	58
31.	திருஇடையாறு	60
32.	திருக்கோடிக்குழகர்	62
33.	பொது (நமக்கடிகளாகியவடிகள்)	63
34.	திருப்புகலூர்	66
35.	திருப்புறம்பயம்	68
36.	திருப்பைஞ்ஞீலி	71
37.	திருவாரூர்	73
38.	திருவதிகை வீரட்டானம்	75
39.	பொது (திருத்தொண்டத் தொகை)	77
40.	திருக்கானாட்டுமுள்ளூர்	80
41.	திருக்கச்சூர் ஆலக்கோயில்	83
42.	திருவெஞ்சமாக்கூடல்	85
43.	திருமுதுகுன்றம்	88
44.	பொது (முடிப்பது கங்கை)	89
45.	திருவாமாத்தூர்	91
46.	திருநாகைக்காரோணம்	93
47.	பொது (ஊர்த் தொகை)	96
48.	திருப்பாண்டிக்கொடுமுடி (நமச்சிவாயத் திருப்பதிகம்)	99
49.	திருமுருகன்பூண்டி	101
50.	திருப்புனவாயில்	104
51.	திருவாரூர்	105
52.	திருவாலங்காடு	108
53.	திருக்கடவூர் மயானம்	111
54.	திருவொற்றியூர்	113
55.	திருப்புன்கூர்	116
56.	திருநீடூர்	118
57.	திருவாழ்கொளிபுத்தூர்	121
58.	திருக்கழுமலம்	124

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

59. திருவாரூர் 126
60. திருவிடைமருதூர் 129
61. திருக்கச்சி ஏகம்பம் 131
62. திருக்கோலக்கா 134
63. பொது (நம்பி திருப்பதிகம்) 136
64. திருத்தினை நகர் 139
65. திருநின்றியூர் 141
66. திருவாவடுதுறை 143
67. திருவலிவலம் 144
68. திருநள்ளாறு 147
69. வடதிருமுல்லைவாயில் 149
70. திருவாவடுதுறை 152
71. திருமறைக்காடு 154
72. திருவலம்புரம் 156
73. திருவாரூர் 157
74. திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும் 160
75. திருவானைக்கா 162
76. திருவாஞ்சியம் 165
77. திருவையாறு 167
78. திருக்கேதாரம் 170
79. திருப்பருப்பதம் 171
80. திருக்கேதீச்சரம் 172
81. திருக்கழுக்குன்றம் 174
82. திருச்சுழியல் 175
83. திருவாரூர் 177
84. திருக்கானப்பேர் 178
85. திருக்கூடலையாற்றூர் 181
86. திருவன்பார்த்தான் பனங்காட்டூர் 182
87. திருப்பனையூர் 184
88. திருவீழிமிழலை 186
89. திருவெண்பாக்கம் 188
90. கோயில் 189

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

91. திருவொற்றியூர் 192
92. திருப்புக்கொளியூர் அவினாசி 193
93. திருநறையூர்ச் சித்தீச்சரம் 195
94. திருச்சோற்றுத்துறை 196
95. திருவாரூர் 198
96. திருவாரூர்ப் பரவையுண் மண்டளி 200
97. திருநனிபள்ளி 202
98. திருநன்னிலத்துப் பெருங்கோயில் 203
99. திருநாகேச்சரம் 205
100. திருநொடித்தான் மலை 206
பாடல் முதல் குறிப்பு அகராதி 208

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
குருபாதம்
திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி நாயனார்

அருளிச்செய்த

ஏழாம் திருமுறை

தேவாரத் திருப்பதிகங்கள்

1. திருவெண்ணெய் நல்லூர்

பண்: இந்தளம் **பதிக எண்: 1**

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறை சூடிபெரு
மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக்
கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி
அல்லேனென லாமே. 1

நாயேன்பல நாளும்நினைப்
பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற
லாகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
ஆயாஉனக் காளாய்இனி
அல்லேன்என லாமே. 2

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மன்னேமற வாதேநினைக்
கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி
ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அன்னேஉனக் காளாய்இனி
அல்லேன்என லாமே. 3

முடியேன்இனிப் பிறவேன்பெறின்
மூவேன்பெற்றம் ஊர்தீ
கொடியேன்பல பொய்யேஉரைப்
பேனைக்குறிக் கொள்நீ
செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அடிகேள்உனக் காளாய்இனி
அல்லேன்என லாமே. 4

பாதம்பணி வார்கள்பெறு
பண்டம்மது பணியா
யாதன்பொரு ளானேன்அறி
வில்லேன்அரு ளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
ஆதீஉனக் காளாய்இனி
அல்லேன்என லாமே. 5

தண்ணார்மதி சூடீதழல்
போலுந்திரு மேனீ
எண்ணார்புர மூன்றும்எரி
யுண்ணநகை செய்தாய்
மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அண்ணாஉனக் காளாய்இனி
அல்லேன்என லாமே. 6

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஊனாய்உயி ரானாய்உட
லானாய்உல கானாய்
வானாய்நில னானாய்கட
லானாய்மலை யானாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
ஆனாய்உனக் காளாய்இனி
அல்லேன்என லாமே. 7

ஏற்றார்புரம் மூன்றும்மெரி
யுண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி
வேனோசெக்கர் வான்நீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
ஆற்றாய்உனக் காளாய்இனி
அல்லேன்என லாமே. 8

மழுவாள்வலன் ஏந்தீமறை
யோதீமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின
தீர்த்தல்லுன தொழிலே
செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அழகாஉனக் காளாய்இனி
அல்லேன்என லாமே. 9

காரூர்புன லெய்திக்கரை
கல்லித்திரைக் கையால்
பாரூர்புக ழெய்தித்திகழ்
பன்மாமணி யுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
ஆரூரன்எம் பெருமாற்காள்
அல்லேன்என லாமே. 10

திருச்சிற்றம்பலம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

2. திருப்பரங்குன்றம்

பண்: இந்தளம் பதிக எண்: 2

திருச்சிற்றம்பலம்

கோத்திட்டையுங் கோவலுங் கோயில்கொண்டீர்
 உமைக்கொண்டுழல் கின்றதோர் கொல்லைச்சில்லைச்
சேத்திட்டுக்குத் தித்தெரு வேதிரியுஞ்
 சிலபூதமும் நீரும் திசைதிசையன
சோத்திட்டுவிண் ணோர்பல ருந்தொழநும்
 மரைக்கோவணத் தோடொரு தோல்புடைசூழ்ந்
தார்த்திட்டதும் பாம்புகைக் கொண்டதும்பாம்
 படிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே. 1

முண்டந்தரித் தீர்முது காடுறைவீர்
 முழுநீறுமெய் பூசுதிர் மூக்கப்பாம்பைக்
கண்டத்திலுந் தோளிலுங் கட்டிவைத்தீர்
 கடலைக்கடைந் திட்டதோர் நஞ்சையுண்டீர்
பிண்டஞ்சுமந் தும்மொடுங் கூடமாட்டோம்
 பெரியாரொடு நட்பினி தென்றிருத்தும்
அண்டங்கடந் தப்புறத்தும் மிருந்தீர்
 அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே. 2

மூடாய முயலகன் மூக்கப்பாம்பு
 முடைநாறிய வெண்டலை மொய்த்தபல்பேய்
பாடாவரு பூதங்கள் பாய்புலித்தோல்
 பரிசொன்றறி யாதன பாரிடங்கள்
தோடார்மலர்க் கொன்றையும் துன்னெருக்குந்
 துணைமாமணி நாகம் அரைக்கசைத்தொன்
றாடாதன வேசெய்தீர் எம்பெருமான்
 அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே. 3

மஞ்சுண்டமா லைமதி சூடுசென்னி
 மலையான்மடந் தைமண வாளநம்பி
பஞ்சுண்டவல் குற்பணை மென்முலையா
 ளொடுநீருமொன் றாயிருத் தல்லொழியீர்
நஞ்சுண்டுதே வர்க்கமு தங்கொடுத்த
 நலமொன்றறி யோம்உங்கை நாகமதற்
கஞ்சுண்டுப டம்மது போகவிடீர்
 அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே. 4

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பொல்லாப்புறங் காட்டகத் தாட்டொழியீர்
புலால்வாயன பேயொடு பூச்சொழியீர்
எல்லாம்அறி வீர்இது வேயறியீர்
என்றிரங்குவேன் எல்லியும் நண்பகலும்
கல்லால்நிழற் கீழொரு நாட்கண்டதுங்
கடம்பூர்க்கரக் கோயிலின் முன்கண்டதும்
அல்லால்விர கொன்றிலம் எம்பெருமான்
அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே. 5

தென்னாத்தெனாத் தெத்தெனா என்றுபாடிச்
சில்பூதமும் நீருந் திசைதிசையன
பன்னான்மறை பாடுதிர் பாசூருளீர்
படம்பக்கங்கொட் டுந்திரு வொற்றியூரீர்
பண்ணார்மொழி யாளையொர் பங்குடையீர்
படுகாட்டகத் தென்றுமோர் பற்றொழியீர்
அண்ணாமலை யேன்என்றீர் ஆரூருளீர்
அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே. 6

சிங்கத்துரி மூடுதிர் தேவர்கணந்
தொழநிற்றீர்பெற் றமுகந் தேறிடுதிர்
பங்கம்பல பேசிடப் பாடுந்தொண்டர்
தமைப்பற்றிக்கொண் டாண்டு விடவுங்கில்லீர்
கங்கைச்சடை யீர்உம் கருத்தறியோம்
கண்ணுமூன்றுடை யீர்கண்ணே ய்ாய்இருந்தால்
அங்கத்துறு நோய்களைந் தாளகில்லீர்
அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே. 7

பிணிவண்ணத்த வல்வினை தீர்த்தருளீர்
பெருங்காட்டகத் திற்பெரும் பேயும்நீரும்
துணிவண்ணத்தின் மேலும்ஓர் தோலுடுத்துச்
சுற்றுநாகத்த ராய்ச்சுண்ண நீறுபூசி
மணிவண்ணத்தின் மேலும்ஓர் வண்ணத்தராய்
மற்றும்மற்றும் பலபல வண்ணத்தராய்
அணிவண்ணத்த ராய்நிற்றீர் எம்பெருமான்
அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே. 8

கோளாளிய குஞ்சரங் கோளிழைத்தீர்
மலையின்தலை யல்லது கோயில்கொள்ளீர்
வேளாளிய காமனை வெந்தழிய
விழித்தீர்அது வன்றியும் வேய்புரையும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தருமை ஆதீனம்

தோளாள்உமை நங்கையொர் பங்குடையீர்
உடுகூறையுஞ் சோறுந்தந் தாளகில்லீர்
ஆளாளிய வேகிற்றீர் எம்பெருமான்
அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமே. 9

பாரோடுவிண் ணும்பக லுமாகிப்
பனிமால்வரை யாகிப் பரவையாகி
நீரோடுதீ யுந்நெடுங் காற்றுமாகி
நெடுவெள்ளிடை யாகி நிலனுமாகித்
தேரோட வரையெடுத் தவரக்கன்
சிரம்பத்திறுத் தீரும செய்கையெல்லாம்
ஆரோடுங்கூ டாஅடி கேள்இதுஎன்
அடியோம்உமக் காட்செய அஞ்சுதுமே. 10

அடிகேள்உமக் காட்செய அஞ்சுதுமென்
றமரர்பெரு மானையா ரூரன்அஞ்சி
முடியால்உல காண்டமூ வேந்தர்முன்னே
மொழிந்தாறுமோர் நான்குமோ ரொன்றினையும்
படியாஇவை கற்றுவல் லவடியார்
பரங்குன்றமே யபர மன்னடிக்கே
குடியாகிவா னோர்க்கும்ஓர் கோவுமாகிக்
குலவேந்தராய் விண்முழு தாள்பவரே. 11

திருச்சிற்றம்பலம்

3. திருநெல்வாயில் அரத்துறை

பண்: இந்தளம் **பதிக எண்: 3**

திருச்சிற்றம்பலம்

கல்வாய்அகி லுங்கதிர் மாமணியுங்
கலந்துந்தி வருந்நிவ வின்கரைமேல்
நெல்வாயி லரத்துறை நீடுறையுந்
நிலவெண்மதி சூடிய நின்மலனே
நல்வாயில்செய் தார்நடந் தார்உடுத்தார்
நரைத்தார்இறந் தார்என்று நானிலத்தில்
சொல்லாய்க்கழி கின்ற தறிந்தடியேன்
தொடர்ந்தேன்உய்யப் போவதொர் சூழல்சொல்லே. 1

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கறிமாமிள கும்மிகு வன்மரமும்
மிகவுந்தி வருந்நிவ வின்கரைமேல்
நெறிவார்குழ லாரவர் காணநடஞ்செய்
நெல்வாயி லரத்துறை நின்மலனே
வறிதேநிலை யாதஇம் மண்ணுலகின்
நரனாக வகுத்தனை நானிலையேன்
பொறிவாயில்இவ் வைந்தினை யும்மவியப்
பொருதுன்னடி யேபுகுஞ் சூழல்சொல்லே. 2

புற்றாடர வம்மரை ஆர்த்துகந்தாய்
புனிதாபொரு வெள்விடை யூர்தியினாய்
எற்றேஒரு கண்ணிலன் நின்னையல்லால்
நெல்வாயி லரத்துறை நின்மலனே
மற்றேல்ஒரு பற்றிலன் எம்பெருமான்
வண்டார்குழ லாள்மங்கை பங்கினனே
அற்றார்பிற விக்கடல் நீந்தியேறி
அடியேன்உய்யப் போவதொர் சூழல்சொல்லே. 3

கோஓடுயர் கோங்கலர் வேங்கையலர்
மிகவுந்தி வருந்நிவ வின்கரைமேல்
நீஇடுயர் சோலைநெல் வாயிலரத்
துறைநின்மல னேநினை வார்மனத்தாய்
ஓஒடுபு னற்கரை யாம்இளமை
உறங்கிவ்விழித் தாலொக்கும் இப்பிறவி
வாஅடியி ருந்துவருந் தல்செய்யா
தடியேன்உய்யப் போவதொர் சூழல்சொல்லே. 4

உலவும்முகி லிற்றலை கற்பொழிய
உயர்வேயொ டிழிநிவ வின்கரைமேல்
நிலவும்மயி லாரவர் தாம்பயிலும்
நெல்வாயி லரத்துறை நின்மலனே
புலன்ஐந்து மயங்கி அகங்குழையப்
பொருவேலொர் நமன்றமர் தாம்நலிய
அலமந்தும யங்கி அயர்வதன்முன்
அடியேன்உய்யப் போவதொர் சூழல்சொல்லே. 5

ஏலம்மில வங்கம் எழிற்கனகம்
மிகவுந்தி வருந்நிவ வின்கரைமேல்
நீலம்மலர்ப் பொய்கையில் அன்னமலி
நெல்வாயி லரத்துறை யாய்ஒருநெல்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வாலூன்ற வருந்தும் உடம்பிதனை
மகிழாதழ காஅலந் தேன்இனியான்
ஆலந்நிழ லில்லமர்ந் தாய்அமரா
அடியேன்உய்யப் போவதொர் சூழல்சொல்லே. 6

சிகரம்முகத் திற்றிர ளாரகிலும்
மிகவுந்தி வருந்நிவ வின்கரைமேல்
நிகரின்மயி லாரவர் தாம்பயிலுந்
நெல்வாயி லரத்துறை நின்மலனே
மகரக்குழை யாய்மணக் கோலமதே
பிணக்கோலம தாம்பிற வியிதுதான்
அகரம்முத லின்னெழுத் தாகிநின்றாய்
அடியேன்உய்யப் போவதொர் சூழல்சொல்லே. 7

திண்டேர்நெடு வீதி யிலங்கையர்கோன்
திரள்தோள்இரு பஃதும்நெ ரித்தருளி
ஞெண்டாடுநெ டுவயல் சூழ்புறவின்
நெல்வாயி லரத்துறை நின்மலனே
பண்டேமிக நான்செய்த பாக்கியத்தாற்
பரஞ்சோதிநின் நாமம் பயிலப்பெற்றேன்
அண்டாஅம ரர்க்கம ரர்பெருமான்
அடியேன்உய்யப் போவதொர் சூழல்சொல்லே. 8

மாணாவுரு வாகியொர் மண்ணளந்தான்
மலர்மேலவன் நேடியுங் காண்பரியாய்
நீணீண்முடி வானவர் வந்திறைஞ்சுந்
நெல்வாயி லரத்துறை நின்மலனே
வாணார்நுத லார்வலைப்பட் டடியேன்
பலவின்கனி ஈயது போல்வதன்முன்
ஆணோடுபெண் ணாமுரு வாகிநின்றாய்
அடியேனுய்யப் போவதொர் சூழல்சொல்லே. 9

நீரூரு நெடுவயல் சூழ்புறவின்
நெல்வாயி லரத்துறை நின்மலனைத்
தேரூர்நெடு வீதிநன் மாடமலி
தென்னாவலர் கோனடித் தொண்டன்அணி
ஆரூரன் உரைத்தன நற்றமிழின்
மிகுமாலையொர் பத்திவை கற்றுவல்லார்
காரூர்களி வண்டறை யானைமன்ன
ரவராகியொர் விண்முழு தாள்பவரே. 10

திருச்சிற்றம்பலம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

4. திருஅஞ்சைக்களம்

பண்: இந்தளம் **பதிக எண்: 4**

திருச்சிற்றம்பலம்

தலைக்குத்தலை மாலை அணிந்ததென்னே
சடைமேற்கங்கை வெள்ளந் தரித்ததென்னே
அலைக்கும்புலித் தோல்கொண் டசைத்ததென்னே
அதன்மேற்கத நாகங்கச் சார்த்ததென்னே
மலைக்குந்நிக ரொப்பன வன்றிரைகள்
வலித்தெற்றி முழங்கி வலம்புரிகொண்டு
அலைக்குங்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே. 1

பிடித்தாட்டிஓர் நாகத்தைப் பூண்டதென்னே
பிறங்குஞ்சடை மேற்பிறை சூடிற்றென்னே
பொடித்தான்கொண்டு மெய்ம்முற்றும் பூசிற்றென்னே
புகர்ஏறுகந் தேறல் புரிந்ததென்னே
மடித்தோட்டந்து வன்றிரை யெற்றியிட
வளர்சங்கம்அங் காந்துமுத் தஞ்சொரிய
அடித்தார்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே. 2

சிந்தித்தெழு வார்க்குநெல் லிக்கனியே
சிறியார்பெரி யார்மனத் தேறலுற்றால்
முந்தித்தொழு வார்இற வார்பிறவார்
முனிகள்முனி யேஅம ரர்க்கமரா
சந்தித்தட மால்வரை போற்றிரைகள்
தணியாதிட றுங்கட லங்கரைமேல்
அந்தித்தலைச் செக்கர்வா னேஒத்தியால்
அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே. 3

இழைக்கும்மெழுத் துக்குயி ரேஒத்தியால்
இலையேஒத்தி யால்உளை யேஒத்தியால்
குழைக்கும்பயிர்க் கோர்புய லேஒத்தியால்
அடியார்தமக் கோர்குடி யேஒத்தியால்
மழைக்குந்நிக ரொப்பன வன்றிரைகள்
வலித்தெற்றி முழங்கி வலம்புரிகொண்டு
அழைக்குங்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே. 4

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வீடின்பய னென்பிறப் பின்பயனென்
விடையேறுவ தென்மத யானை நிற்கக்
கூடும்மலை மங்கை யொருத்தியுடன்
சடைமேற்கங்கை யாளைநீ சூடிற்றென்னே
பாடும்புல வர்க்கரு ளும்பொருளென்
நெதியம்பல செய்த கலச்செலவின்
ஆடுங்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே. 5

இரவத்திடு காட்டெரி யாடிற்றென்னே
இறந்தார்தலை யிற்பலி கோடலென்னே
பரவித்தொழு வார்பெறு பண்டமென்னே
பரமாபர மேட்டி பணித்தருளாய்
உரவத்தொடு சங்கமொ டிப்பிமுத்தங்
கொணர்ந்தெற்றி முழங்கி வலம்புரிகொண்டு
அரவக்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே. 6

ஆக்கும்மழி வும்மைய நீயென்பன்நான்
சொல்லுவார்சொற் பொருளவை நீயென்பன்நான்
நாக்கும்செவி யும்கண்ணும் நீயென்பன்நான்
நலனேஇனி நான்உனை நன்குணர்ந்தேன்
நோக்குந்நெதி யம்பல எத்தனையும்
கலத்திற்புகப் பெய்துகொண் டேறநுந்தி
ஆர்க்குங்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே. 7

வெறுத்தேன்மனை வாழ்க்கையை விட்டொழிந்தேன்
விளங்குங்குழைக் காதுடை வேதியனே
இறுத்தாய்இலங் கைக்கிறை யாயவனைத்
தலைபத்தொடு தோள்பல இற்றுவிழக்
கறுத்தாய்கடல் நஞ்சமு துண்டுகண்டங்
கடுகப்பிர மன்தலை யைந்திலும்ஒன்று
அறுத்தாய்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் க்ளத்தப்பனே. 8

பிடிக்குக்களி றேஒத்தி யால்எம்பிரான்
பிரமற்கும் பிரான்மற்றை மாற்கும்பிரான்
நொடிக்கும்மள விற்புரம் மூன்றெரியச்
சிலைதொட்டவ னேஉனை நான்மறவேன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வடிக்கின்றன போற்சில வன்றிரைகள்
வலித்தெற்றி முழங்கி வலம்புரிகொண்டு
அடிக்குங்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனே. 9

எந்தம்மடி களிமை யோர்பெருமான்
எனக்கென்றும் அளிக்கும் மணிமிடற்றன்
அந்தண்கட லங்கரை மேல்மகோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனை
மந்தம்முழ வுங்குழ லும்மியம்பும்
வளர்நாவலர் கோன்நம்பி ஊரன்சொன்ன
சந்தம்மிகு தண்தமிழ் மாலைகள்கொண்டு
அடிவீழவல் லார்தடு மாற்றிலரே. 10

திருச்சிற்றம்பலம்

5. திருவோணகாந்தன்தளி

பண்: இந்தளம் **பதிக எண்: 5**

திருச்சிற்றம்பலம்

நெய்யும் பாலுந் தயிருங் கொண்டு
நித்தல் பூசனை செய்ய லுற்றார்
கையி லொன்றுங் காண மில்லைக்
